**பிரஸார் பாரதி**
**அகில இந்திய வானொலி, சென்னை-4**
***20 10 2025 MONDAY 7.15 PM***
**ஆகாஷவாணி**
**தலைப்புச் செய்திகள்**

1. பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள நாடுகளை வளர்ச்சிப்பாதைக்கு அழைத்து வரும் முயற்சியை இந்தியா மேற்கொண்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. இந்தியாவின் கலாச்சாரத்திற்கும், பாரம்பரியத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் புதுதில்லியில் உள்ள நட்பு நாடுகளின் தூதரகங்கள் ஒன்றிணைந்து தீபாவளி பண்டிகையை கொண்டாடின.

3. தூய்மை, விபத்தில்லா பசுமை தீபாவளி முன்னோடி இயக்கத்தை மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் தொடங்கியுள்ளது.

4. இஸ்ரேல், ஹமாஸ் மீது இன்று வான்வழி தாக்குதல் நடத்தியுள்ள போதிலும் போர் நிறுத்தம் தொடர்வதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

5. உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் பங்களாதேஷ் வெற்றிபெற 203 ரன் இலக்கை, இலங்கை அணி நிர்ணயித்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>>

பொருளாதார ரீதியாக பின்தங்கியுள்ள நாடுகளை வளர்ச்சிப்பாதைக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை இந்தியா மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

கோவாவில் இன்று ஐ என் எஸ் விக்ராந்த் கப்பலில் தீபாவளி பண்டிகையை கடற்படை வீரர்களுடன் கொண்டாடிய பிரதமர், உலகின் எந்தவொரு நாட்டிற்கும் மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்வதில் இந்தியா ஒருபோதும் தயக்கம் காட்டியதில்லை என்று கூறினார்.

ஆப்பிரிக்காவிலிருந்து, தென் கிழக்கு ஆசிய வரை அனைத்து நாடுகளுக்கும் இந்தியா உதவி செய்து வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்திய கடற்படையின் துணையோடு மகா சாகர் கடல்சார் தொலைநோக்குத் திட்டத்தை இந்தியா செயல்படுத்தி வருவதாகவும், இதனால் பல நட்பு நாடுகள் இக்கட்டான சூழ்நிலைகளில் இந்தியாவின் உதவியை பெற்று வருவதாகவும் பிரதமர் கூறினார்.

*கடந்த 2014-ஆம் ஆண்டு அண்டை நாடான மாலத்தீவில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டபோது, கடற்படையின் உதவியுடன் ஆபரேஷன் நீர் என்ற திட்டத்தை செயல்படுத்தி, அவர்களுக்கு கப்பல் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்கியதாக தெரிவித்தார்.*

*2017-ஆம் ஆண்டு இலங்கை பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்டபோது, முதலில் கைகொடுத்தது இந்தியாதான் என்றும் பிரதமர் தெரிவித்தார்.*

*2018-ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியால் மிக கடுமையாக பாதிக்கப்பட்ட நாடான இந்தோனேஷியாவுக்கும் தோளோடு தோள் நின்று மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கூறினார்.*

*மியான்மரில் 2019-2020-ஆம் ஆண்டுகளில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பேரழிவின்போதும் சேவை உள்ளத்தோடு அந்நாட்டிற்கு உதவி செய்ததையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.*

*வெளிநாடுகளில் இயற்கை பேரிடரால் மக்கள் பாதிக்கப்படும்போது, அவர்களுக்கு உதவ நாட்டின் முப்படைகளும் முன்வந்ததாக அவர் தெரிவித்தார்.*

*நிலம், கடல் மற்றும் வான்வழியாக அனைத்து உதவிகளையும் முப்படைகள் செய்து வருவதையும் பிரதமர் குறிப்பிட்டார்.*

*எல்லை பாதுகாப்புப்படையினர், இந்தோ – திபெத் எல்லை காவல்படையினர், அஸ்ஸாம் ரைஃபிள்ஸ், மத்திய ரிசர்வ் படையினர், மத்திய தொழிலக பாதுகாப்புப்படையினர் உள்ளிட்ட அனைவரும் முப்படைகளோடு இணைந்து, மனிதாபிமானத்தோடு பிற நாட்டு மக்களுக்கு உதவி செய்ததாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.*

*நாட்டின் எல்லைப்பகுதிகளுக்கு உட்பட்ட தீவுகளில் குடியரசு தினத்தன்று தேசியக்கொடி ஏற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்திய கடற்படையினர் முழுமையாக நிறைவேற்றியுள்ளதாக பிரதமர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.*

*<<<<<<>>>>>>*

*தீபாவளி பண்டிகையொட்டி, குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவை, குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் சந்தித்து வாழ்த்துகளை பரிமாறிக்கொண்டார்.*

*முன்னாள் குடியரசுத் தலைவர் திரு ராம்நாத் கோவிந்த், தங்களது குடும்பத்தினருடன் குடியரசுத் தலைவரை சந்தித்து வாழ்த்துகளை பரிமாறிக்கொண்டார்.*

*தீபாவளியையொட்டி, தில்லி முதலமைச்சர் திருமதி ரேகா குப்தாவும், குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்முவை சந்தித்து வாழ்த்து பெற்றார்.*

*<<<<<<>>>>>>*

இந்திய கலாச்சாரத்திற்கும், பாரம்பரியத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் புதுதில்லியில் உள்ள நட்பு நாடுகளின் தூதரகங்கள் ஒன்றிணைந்து இன்று தீபாவளி பண்டிகையை கொண்டாடின.

ஃபின்லாந்து, இஸ்ரேல், ஆஸ்திரியா, பிரேசில், சுவிட்சர்லாந்து மற்றும் ஐரோப்பிய யூனியன் தூதரகங்கள் இணைந்து வண்ணமயமாக இப்பண்டிகையை கொண்டாடி மகிழ்ந்தன.

ஃபின்லாந்து தூதரகத்தின் சார்பில், நாட்டிய நிகழ்ச்சி, சிறப்பு விருந்து, வினாடி – வினா நிகழ்ச்சிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இஸ்ரேல் தூதரகத்தின் சார்பில், தீபாவளி திருநாளுக்கான கடைகள் அமைக்கப்பட்டு, பாரம்பரிய முறையில் மலர்கள் மற்றும் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

இஸ்ரேல் தூதரகத்தில் ரங்கோலி கோலங்களும் போடப்பட்டிருந்தது மக்களை வெகுவாக கவர்ந்தது.

சுவிட்சர்லாந்து தூதரகத்திலும் தீபாவளி பண்டிகை வண்ணமயமாக கொண்டாடப்பட்டது.

தூதரக அதிகாரிகள் ஒருவருக்கொருவர் வாழ்த்துகளை பரிமாறிக்கொண்டனர்.

ஐரோப்பிய யூனியன், ஆஸ்திரியா, பிரேசில் தூதர்களும் இந்தியாவுக்கு பாரம்பரிய முறையில் தங்களது தீபாவளி வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டனர்.

<<<<<<>>>>>>

தூய்மையான, விபத்தில்லாத பசுமை தீபாவளி கொண்டாடும் இயக்கத்தை மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னோடி இயக்கமாக புதுதில்லியில் தொடங்கப்பட்டுள்ள பசுமை தீபாவளி பிரச்சாரத்தில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்டனர்.

சுற்றுச்சூழலை உறுதி செய்யும் *Life* இயக்கத்தின் ஒரு பகுதியாக பசுமை தீபாவளி இயக்கமும் இன்று கடைபிடிக்கப்பட்டது.

பிளாஸ்டிக்கினால் தயாரிக்கப்படும் அலங்காரங்க பொருட்களை தவிர்ப்பது, இயற்கையான அரிசி மாவு பூ இதழ்கள், மஞ்சள் ஆகிய இயற்கை பொருட்களை ரங்கோலி கோலத்திற்கு பயன்படுத்துவது, எரிசக்தியை சேமிக்கும் வகையில் எல் இ டி விளக்குகள், சோலார் விளக்குகள், பாரம்பரிய அகல் விளக்குகள் ஆகியவற்றை பயன்படுத்துவது, உள்நாட்டிலேயே இயற்கை பொருட்களை பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட பரிசுப் பொருட்களை பயன்படுத்துவது, பண்டிகை கால கழிவுகள் மற்றும் குப்பைகளை தவிர்ப்பதற்கான முயற்சியை மேற்கொள்வது ஆகிய விழிப்புணர்வு முழக்கங்கள் பசுமை தீபாவளி இயக்கத்தின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

<<<<<<>>>>>>

*சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைகள் காரணமாக, பல்வேறு பொருட்களின் விலை கணிசமாக குறைந்துள்ளது.*

*தமிழகத்தின் தருமபுரி மாவட்டத்தில் பட்டுப்புழு வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயி வேளாண் கருவிகளின் விலைகள் அதிக அளவில் குறைந்துள்ளதை வரவேற்பதாக தெரிவித்தார்.*

*(Voice Byte – விவசாயி - 34 Sec. )*

*<<<<<<>>>>>>*

*தமிழகத்தின் சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடிபட்டி பறவைகள் சரணாலயத்திற்கு ஆஸ்திரேலியா, ஐரோப்பா உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஆண்டுதோறும் இனப்பெருக்கத்திற்காக பறவைகள் வந்து செல்கின்றன.*

*இந்த சரணாலயத்தையொட்டி அமைந்துள்ள கிராமப்புற மக்கள் பறவைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படாத வகையில் பட்டாசு இல்லா தீபாவளியை கொண்டாடி மகிழ்வதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.*

*(Voice Byte – முருகன் – 42 Sec.)*

*<<<<<<>>>>>>*

*இஸ்ரேல், ஹமாஸ் மீது இன்று புதிதாக வான்வழி தாக்குதலை நடத்தியுள்ள போதிலும் போர் நிறுத்தம் தொடர்வதாக அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.*

*காஸா பகுதியில் இஸ்ரேல் இன்று நடத்திய வான்வழி தாக்குதலில், 15-க்கும் மேற்பட்ட அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்தனர்.*

*பத்திரிகையாளர் ஒருவரும் உயிரிழந்தார்.*

*Rafah-பகுதியில் குண்டுவெடித்ததில் இஸ்ரேலிய வீரர்கள் இருவர் உயிரிழந்தனர்.*

*இதனிடையே, அமெரிக்க அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் அனுப்பிய இரண்டு பேர் கொண்ட தூதுக்குழு இன்று இஸ்ரேல் சென்றடைந்தது.*

*பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகுவை, இந்த தூதுக்குழுவினர் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.*

*<<<<<<>>>>>>*

*பாதுகாப்பு மற்றும் விண்வெளித்துறையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான முதலீடுகளை தென்கொரியா 2030-ஆம் ஆண்டுக்குள் மேற்கொள்ளும் என்று அதிபர் Leejae myung தெரிவித்துள்ளார்.*

*முன்னதாக சியோல் சர்வதேச விண்வெளி மற்றும் பாதுகாப்பு கண்காட்சியின் தொடக்க விழாவில அவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.*

*உலகின் முதல் நான்கு பாதுகாப்பு சக்திகளில் ஒன்றாக தென்கொரியாவை மாற்றுவதற்கான தொலைநோக்கு இலக்கையும் அவர் உறுதிபடுத்தினார்.*

*உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்துவதற்கான முயற்சிகளை தென்கொரியா மேற்கொள்ளும் என்றும், ஏற்றுமதி போட்டிகளை எதிர்கொள்ளும் வகையில் உள்நாட்டு உற்பத்தி அதிகரித்து, பொருளாதார வளர்ச்சி மேம்படும் என்றும் திரு Lee Jae Myung தெரிவித்தார்.*

*<<<<<<>>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 203 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பேட் செய்துவரும் பங்களாதேஷ் அணி சற்றுமுன்வரை 5 ஓவரில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 8 ரன் எடுத்துள்ளது*

*மும்பையில் நடைபெற்றுவரும் இப்போட்டியில், முதலில் பேட் செய்த இலங்கை அணி 48 புள்ளி நான்கு ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 202 ரன் எடுத்தது.*

*<<<<<<END>>>>>>*